## செயலாளர், தருமபுரி விற்பனைக்குழு, தருமபுரி அவர்களின் செயல்முறை ஆணைகள் :-
## முன்னிலை. திரு.மு.இரவி.,

------

செ.மு.ஆ.எண் முள/1111 /2020 நாள்: 21.09.2022

பொருள் : பணிக்குழு – தருமபுரிவிற்பனைக்குழு – திரு.சா.சரவணன், களக்கண்காணி, ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு தற்காலிக அடிப்படையில் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை :
1. அரசாணை எண். 978, வேளாண்மைத் துறை, நாள்: 23.05.1984
2. அரசாணை எண் :43 (பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை), நாள் :15.02.1994.
3. ஆணையர், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை அவர்களது கடிதம் எண்.விகுப.3/7499/2006, நாள் :09.08.2010.
4. செயலாளர், தருமபுரி விற்பனைக்குழு, தருமபுரி அவர்களின் செயல்முறை ஆணை எண்.முள/1111/2020, நாள் :30.11.2020.
5. திரு.சா.சரவணன், இளநிலை உதவியாளர், தலைமை அலுவலகம், தருமபுரி விற்பனைக்குழு, அவர்களின் கடித நாள் :27.12.2021.

----------

**ஆணை:**

பார்வை 4–ல் காணும் உத்தரவின்படி, தருமபுரி விற்பனைக்குழுவில் காலியாக இருந்த இளநிலை உதவியாளர் பணியிடங்களில், பார்வை 2–ல் காணும் அரசாணையின் அடிப்படையில் 20% இளநிலை உதவியாளர் பணியிடங்களை பதவி உயர்வு மூலமாக நிரப்பிட பார்வை 3–ல் காணும் ஆணையரக கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் 01.04.2020 அன்றைய நிலையில் இளநிலை உதவியாளர் பதவி உயர்விற்கான ஒருங்கிணைந்த மூதுரிமைப் பட்டியல் (Combined Seniority List) தயாரிக்கப்பட்டதில் மூதுரிமையில் முதலிலும், பதவி உயர்வுக்கு தேவையான அனைத்து தகுதிகளும் பெற்றிருந்த திரு.சா.சரவணன், களக்கண்காணி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், கிருஷ்ணகிரி அவர்களுக்கு இளநிலை உதவியாளராக தற்காலிக பதவி உயர்வு வழங்கி தலைமை அலுவலகம் (ஆ1 பிரிவு) இளநிலை உதவியாளராக நியமித்து உத்தரவிடப்பட்டது. அதன் அடிப்படையில் தனியர் தலைமை அலுவலகம், ஆ1 பிரிவு இளநிலை உதவியாளராக 01.12.2020 மு.ப பணியில் இணைந்து பணிபுரிந்து வருகின்றார்.

மேற்படி, தற்காலிக பதவி உயர்வு வழங்கப்பட்ட தனியர் 01.12.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதைத் தொடர்ந்து, கீழ்கண்ட விவரப்படி, கலம் (5)–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர் இளநிலை உதவியாளராக பணியேற்ற நாள் முதல் பணி வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

த.பி.பா...

Scanned with CamScanner

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பணியிடம் | இளநிலை உதவியாளர் பதவியில் | |
|---|---|---|---|---|
| | | | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திரு.சா.சரவணன், இளநிலை உதவியாளர் | (ஆ1 பிரிவு), தலைமை அலுவலகம், தருமபுரி விற்பனைக்குழு | 01.12.2020 மு.ப | 01.12.2020 மு.ப |

தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, கலம் (5)–ல் உள்ளவாறு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ச்சியான மூன்றாண்டு பணி காலத்தில் இரண்டாண்டு காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. தனியர் தனது தகுதிகாண் பருவ காலத்திற்குள் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெறல் வேண்டும் என அறிவிக்கப்படுகின்றது.

1. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
2. தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை தேர்வு
3. பவானிசாகர் பயிற்சி மையத்தில் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படைப்பயிற்சியில் கலந்துகொண்டு அப்பயிற்சிக்கான தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

இவ்வாணையினை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதல் அளிக்குமாறு உத்தரவிடப்படுகின்றது.

செயலாளர்,
தருமபுரி விற்பனைக்குழு,
தருமபுரி.

21/9/22

பெறுதல்:

திரு.சா.சரவணன்,
இளநிலை உதவியாளர் (ஆ1 பிரிவு),
தலைமை அலுவலகம்,
தருமபுரி விற்பனைக்குழு, தருமபுரி.

நகல்:

1. மேற்பார்வையாளர் (நிர்வாகம்) – இருப்புக்கோப்பு
2. தனியரது பணிப்பதிவேடு.
3. இளநிலை உதவியாளர் (அ1 பிரிவு)

21.09.2022

Scanned with CamScanner